# இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் நிலவுகின்ற கீழ்காணும் பதவிகளுக்கு சிறந்த உடல் நலமும், நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி/தொழில் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022 நவம்பர் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் **"பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பப்படிவத்தைத் தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

***கவனிக்குக:*** *தாம் விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பப்படிவத்தின் மேல் குறிப்பிடுதல் வேண்டும்.*

01. **தரவுகள் கட்டுப்பாட்டாளர் பதவி**

1.1. **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 52,955-5x1335/8x1630-72,670/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 110,000/- ஆகும்).

1.2. **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3. **கல்வித் தகைமைகள்:** கணனி விஞ்ஞானம்/தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் பற்றிய ஒரு பட்டத்தை பெற்றிருத்தல்.

1.4. **அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு** - மேற்குறித்த தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் தரவுகள் கட்டுப்பாட்டாளர் ஒருவராக ஐந்து (05) வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு** - மேற்குறித்த தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர் பாராளுமன்ற செயலாளரின் பணியாட்டொகுதியில் தகவல் முறைமை முகாமைத்துவ திணைக்களத்தில் பணியாற்றி எட்டு (08) வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

1.5. **ஆட்சேர்ப்பு முறை**

எழுத்து/செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

02. **களஞ்சிய காப்பாளர் பதவி**

2.1. **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 32,330-3x380/10x445/4x660-40,560/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 74,000/- ஆகும்).

2.2. **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 30 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3. **கல்வித் தகைமைகள்:** க.பொ.த. (உ.த.) பரீட்சையில் நான்கு படங்களில் (பழைய பாடத்திட்டம்) அல்லது புதிய பாடத்திட்டமாயின், மூன்று பாடங்களில் ஒரேதடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மற்றும் கணிதப் பாடத்திலும் திறமைச் சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில், இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

2.4. **தொழில் தகைமைகள்:-** வழங்கல் மற்றும் மூலப்பொருட்கள் முகாமைத்துவ நிறுவகத்தால் வழங்கப்படும் களஞ்சிய காப்பு/களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய ஒரு சான்றிதழையும் மற்றும் தரவுகள் உள்ளீர்ப்பு (Data Entry) மற்றும் கணனி பிரயோகம் (Office Package) பற்றிய ஆரம்ப அறிவையும் பெற்றிருத்தல்.

2.5. **அனுபவம்:-** ஒரு அரசாங்க நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் களஞ்சிய முகாமை பற்றி மூன்று (03) வருடங்களுக்கு குறையாத கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

2.6. **ஆட்சேர்ப்பு முறை**

எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**03.** **மின்னியலாளர் பதவி**

**3.1.** **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 28,250-9x300/10x330/3x380-35,390/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 68,000/- ஆகும்).

**3.2.** **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3.3.** **கல்வித் தகைமைகள்:** சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

**3.4.** **தொழில் தகைமைகள்:-** மின்னியல் பிரிவில் NVQ IV மட்டத்திலான ஒரு சான்றிதழை பெற்றிருத்தல்.

**3.5.** **அனுபவம்:-** அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் பணியாற்றி மின்னியல்/ இலத்திரனியல்/அளவை உபகரணங்கள் பிரயோகம் முதலிய பிரிவுகளில் ஆகக்குறைந்தது மூன்று (03) சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

கட்புல, செவிப்புல பிரிவுகளில் தொழில்புரியும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**3.6.** **ஆட்சேர்ப்பு முறை:-**
செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**04.** **மேசன் பதவி:-**

**4.1.** **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 28,250-9x300/10x330/3x380-35,390/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 68,000/- ஆகும்).

**4.2.** **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.3. **கல்வித் தகைமைகள்:** சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

***(குறிப்பு: நிர்மாண துறை பற்றிய NVQ III மட்டம் அல்லது அதற்கு உயர்ந்த ஒரு மட்டத்தில் ஒரு சான்றிதழ் இருக்குமாயின், மேற்குறித்தவாறு க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை)***

4.4. **தொழில் தகைமை:-** நிர்மாண வல்லுநர் (மேசன்) பற்றிய NVQ IV மட்டத்தில் ஒரு சான்றிதழை பெற்றிருத்தல்.

4.5. **அனுபவம்:-** அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் மேசன் பிரிவில் 3 வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

4.6. **ஆட்சேர்ப்பு முறை**

செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப் படும்.

## 05. பயிற்சி பெற்ற தொழிலாளர் (சிவில்) பதவி

5.1. **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520-9x270/10x330-6x330-32,930/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 63,000/- ஆகும்).

5.2. **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்

5.3. **கல்வித் தகைமைகள்:** சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

***(குறிப்பு: நிர்மாண துறை பற்றிய NVQ III மட்டத்தில் ஒரு சான்றிதழ் இருக்குமாயின், மேற்குறித்தவாறு க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை)***

5.4. **தொழில் தகைமை:-** தொழில் பயிற்சி அதிகார சபையால்/தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு அரசாங்க நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிர்மாண விடயம் (சிவில்) பற்றிய ஒரு NVQ III மட்டத்திலான ஒரு சான்றிதழை பெற்றிருத்தல்.

5.5. **அனுபவம்:-** அரசாங்க சேவையில்/அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் நிர்மாண விடயப் பிரிவில் (சிவில்) மூன்று (03) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

5.6. **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்து/செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**06. பயிற்சி பெற்ற தொழிலாளர் (மின்னியல்) பதவி**

6.1. **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520-9x270/10x300-6x330-32,930/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 63,000/- ஆகும்).

6.2. **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6.3. **கல்வித் தகைமைகள்:** சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

***(குறிப்பு: நிர்மாண துறை பற்றிய NVQ III மட்டத்தில் ஒரு சான்றிதழ் இருக்குமாயின், மேற்குறித்தவாறு க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை)***

6.4. **தொழில் தகைமை:-** தொழில் பயிற்சி அதிகார சபையால்/தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு அரசாங்க நிறுவனத்தால் வழங்கப்பட்ட மின்னியல்/இலத்திரனியல்/அளவை உபகரணங்கள் பிரயோகம் முதலிய பிரிவுகள் பற்றிய NVQ III மட்டத்திலான ஒரு சான்றிதழை பெற்றிருத்தல்.

6.5. **அனுபவம்:-** அரசாங்க சேவையில்/அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் மின்னியல்/இலத்திரனியல்/அளவை உபகரணங்கள் பிரயோகம் பற்றி மூன்று (03) வருடங்களுக்கு குறையாத ஒரு சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

6.6. **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்து/செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**07. பொருட்கள் ஏற்பு உதவியாளர்**

7.1. **சம்பள அளவுத்திட்டம்:** 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520-

9x270/10x300-6x330-32,930/- ஆகும் (சகல மேலகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 63,000/- ஆகும்).

7.2. **வயதெல்லை:** விண்ணப்பம் அழைக்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7.3. **கல்வித் தகைமைகள்:** சிங்கள அல்லது தமிழ் மொழிக்கு திறமைச்சித்திகளுடனும் கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்திகளுடனும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.

7.4. **தொழில் தகைமை:-** இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) அல்லது அரசாங்கம் அங்கீகரித்த ஏனைய ஒரு நிறுவனம் ஆரம்ப மட்ட சமையல்/உணவுபான சேவைகள் தொடர்பாக வழங்கும் 05 மாதங்களுக்கு குறையாத ஒரு சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

சமையல்/உணவுபான சேவைகள் பற்றிய II ஆம் மட்ட NVQ சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

7.5. **அனுபவம்:-** ஒரு நட்சத்திர ஹோட்டலில்/அரசாங்கம் அங்கீகரித்த ஒரு நிறுவனத்தில் பொருள் ஏற்பு உதவியாளர்/சமையல் உதவியாளர்/விடுதி உதவியாளர் ஒருவராக ஆறு மாதத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

7.6. **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்து/செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

## 08. சேவை நியதிகளும் மற்றும் நிபந்தனைகளும்

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்மள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். உள்வாரி விண்ணப்பதாரர் அல்லது ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**09.** கீழ்காணும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்ப - தாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கோரப்படும் பட்சத்தில் மாத்திரம் அந்த சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

**10.** அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க கூட்டுத் தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

**11.** ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகமையை இழக்கச் செய்யலாம்.

**12.** விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் பொய்யானது என ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அவர் தகுதியற்றவராவார் என குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

**13.** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பி வைக்கப்படும் அல்லது திணைக்கள/நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். திணைக்கள/நிறுவன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் மற்றும் இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2022 நவம்பர் 04

**இலங்கைப் பாராளுமன்றம்**
**மாதிரி விண்ணப்பப்படிவம்**
**......................................................... பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்):

..............................................................................................................................

..............................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்):-

..............................................................................................................................

..............................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs./Miss:-............

..............................................................................................................................

..............................................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

03. (அ) தனிப்பட்ட முகவரி:-

..............................................................................................................................

..............................................................................................................................

தொலைபேசி இலக்கம்:-

(ஆ) அலுவலக முகவரி:-

..............................................................................................................................

..............................................................................................................................

தொலைபேசி இலக்கம்:-

(இ) தயவுசெய்து பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட அலுவலக

04. (அ) பிறந்த திகதி:..........................................................................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிற்கு: வருடம்:- .......மாதம்:-....... நாள்:-......

05. விவாகமானவரா / விவாகமாகாதவரா என்ற விபரம் (விவாகம் செய்தவர்/ விவாகம் செய்யாதவர்)

06. பால்: (ஆண் / பெண்)

07. இலங்கைப் பிரஜையா எனும் விபரம்:- (ஆம்/இல்லை)

08. கல்வி மற்றும் உயர் கல்வி தகைமைகள்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
........................................................................................................
.........................................................................................................................................
.........................................................................................................................................

09. தொழில் தகைமை:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

10. ஏனைய தகைமைகள்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
.........................................................................................................................................
.........................................................................................................................................
.........................................................................................................................................

11. அனுபவம்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவை காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:-
.........................................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி:-......................................................................................

(இ) தற்போதைய பதவி:-.............................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்:-.........................................................................

(உ) கொடுப்பனவு:-.....................................................................................................

(ஊ) மொத்த சம்பளம்:-...............................................................................................

13. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை), அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:-...........................................................................................................................

...........................................................................................................................................................

...........................................................................................................................................................

14. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/ இல்லை) அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:..........................

...........................................................................................................................................................

...........................................................................................................................................................

...........................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப் படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இப்பதவிற்கு தகுதியற்றவனாவேன் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நன்கறிவேன்.

திகதி:................. ......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

**திணைக்கள / நிறுவன தலைவரின் சிபாரிசு**
**அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)**

**பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்டு,**

இந்நிறுவனத்தில் ........................................................................................................பதவியை வகிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………………………………………… அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என நான் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிற்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்பட மாட்டார் (தயவுசெய்து பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடவும்).

திகதி:..................... ...........................................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)